கிழக்கில் அச்சுக் கலையின் முன்னோடி...
வணசிங்கா பிரிண்டர்ஸ்

496A, திருமலை வீதி, மட்டக்களப்பு.
065 222 7170, 065 36 50 361
wanasingheprinters@gmail.com
மட்டக்களப்பு



# தமிழ் ஓசை

"தரணியெங்கும் தமிழை உரக்கச் சொல்வோம் உரைக்கச் செய்வோம்"



மட்டக்களப்பில்...
பத்திரிகை விற்பனைத்துறையில் முன்னோடி
ராதா ஸ்ரோர்ஸ்

திருமலைவீதி, மட்டக்களப்பு.
(வயோதிபர் இல்லத்துக்கு முன்னால்)
BATTICALOA



கலியுகத்திலும் தொடரும் கடவுளின் அதிசயம் 09

பிரதான அரசியல் கட்சியாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணி 07

10 இலங்கைக்கு பெருமை சேர்த்தார் நாவற்குடா மாணவன்

08 ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகம் திறப்பு



● ஒலி : 01 ● ஓசை : 02 ● மாதாந்த வெளியீடு (செப்டெம்பர்) ● பக்கம் : 12 ● விலை : 50.00




மட்டக்களப்பின் வரலாற்றில் மறக்க முடியா...

# சத்துருக்கொண்டான் படுகொலைகள்




பக்கம் 03


"இச் சம்பவத்திற்கு காரணமானவர்கள் இலங்கை அரசாங்கத்தினால் தண்டிக்கப்படவில்லை நல்லிணக்கம், உண்மையை கண்டறியும் விடயத்திற்குள் காலடி வைத்துள்ள நல்லாட்சி அரசாங்கமும் சர்வதேசமும் இந்த படுகொலைக்கான நீதியினைப் பெற்றுத்தரவேண்டும்"

## சர்வதேசத்தில்

சட்ட முதுமாணி பட்டம் பெற்ற முதலாவது நீதிபதி

மட்டக்களப்பு நீதவான்

**மாணிக்கவாசகர் கணேசராஜா**

மட்டக்களப்பு நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான மாணிக்கவாசகர் கணேசராஜா. சர்வதேச புகழ்பெற்ற பிரித்தானியா மற்றும் அமெரிக்க பல்கலைக்கழகங்களிலிருந்து சட்ட முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். வடக்கு கிழக்கிலுள்ள நீதிபதிகளில் சர்வதேச புகழ் வாய்ந்த பிரித்தானியா மற்றும் அமெரிக்க பல்கலைக் கழகத்திலிருந்து சட்ட முதுமாணி பட்டம் பெற்ற முதலாவது நீதிபதி இவர் என்பதுடன் இரண்டு சர்வதேச கௌரவ விருதுகளையும் தனதாக்கிக்கொண்டவர் என்பது விஷேடமாகும். சர்வதேச நீதிபதிகள் குழாமும் பிரித்தானியா நோட்டிங்ஹாம் பல்கலைக்கழகமும் நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா அவர்களை கௌரவப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும்



## மட்டக்களப்பு வாழ் மக்களின் நீண்டகால தேவை பூர்த்தியாகியுள்ளது

- கிரான் பாலம் 1531 மில்லியன்
- குருமன்வெளி மண்டூர் பாலம் 1400 மில்லியன்
- நரிப்புல்தோட்டம் பன்குடாவெளி பாலம் 650 மில்லியன்
- கிண்ணையடி முருகன்தீவு பாலம் 850 மில்லியன்
- சந்திவெளி திகிலிவெட்டை பாலம் 1200 மில்லியன்
- மலையார்கட்டு இறாணைமடு பாலம் 120 மில்லியன்
- கிராமியப்பாதைகள் 722 மில்லியன்
- கரையோரப்பாதைகள் (மட்-கல்குடா) 3000 மில்லியன்


பக்கம் 08


## fpof;fpd; நிலைமைகள் தெரியாமல் மக்களை குழப்ப வேண்டாம்




பக்கம் 02


கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட்

உள்ளே... புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான நுண்ணறிவு பயிற்சி வினாக்கள்


BRANCHES
Bilaal Kidz
Sale Center
34 | 38 | 44,
MAHATHMA GANDHI STREET,
BATTICALOA
065 2222400
065 2226305

GRAND REOPENED
Bilaal

BRANDED SHIRTS & T-SHIRTS, BRANDED TROUSERS
FORMAL CASUAL WEARS, INNER WEARS, SHORTS, BOTTOMS
SARONGS, ALL TYPE MATERIALS, LADIES TOPS & LEGGINS, DENIMS
BRIDAL SAREES, SKIRTS & BLOUSES AND ALL ACCESSORIES ..
FOLLOW US ON FACEBOOK

**‘கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழா அர் எனின்”**

தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளைத் தொழாமல் இருப்பாரானால் அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன?

# ஊடக தர்மம்

## பேணப்படுவது அவசியம்...



ஜனநாயகத்தின் நான்காவது தூணாக கருதப்படுவது ஊடகமாகும். ஊடகத்தின் மூலம் ஒரு நாட்டின் பல்வேறு மாற்றங்கள் நடைபெற்றமை உலகறிந்த உண்மையாகும்.ஆனாலும் ஒரு சில நாடுகளில் ஊடகம் சுதந்திரமாக இயங்குவதற்கு உரிமை இருக்கின்றது.சில நாடுகளில் சுதந்திரமாக இயங்குவதற்கு உரிமை மறுக்கப்பட்ட நிலையும் உண்டு.இன்றைய நவீன தொழிநுட்ப காலத்தில் ஒருவர் தனது பெயரில் இணையத்தளத்தை வைத்துக் கொண்டு கண்டபடி வசனங்களை எழுதி விமர்சனம் பண்ணிக்கொள்வதுடன். தனி நபரைப்பற்றி தரக்குறைவாக எழுதியும் வருகின்றனர். அரசியல்வாதி முதல் அதிகாரி வரை நடுநிலை உணர்வோடு இன்றி கருத்துக்களை வெளியிட்டுவருவதும் விமர்சனம் செய்வதும் இன்று அதிகரித்து விட்ட தொன்றாகும்.விமர்சனங்கள் கருத்துக்கள் இருக்கத்தான் வேண்டும்.ஆனாலும் அது ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும்.ஒரு செய்தியினை வெளியிட முன்னர் அதனை ஆழமாக வாசித்து ஆராய்ந்து அச்செய்தியின் மூலம் சமூகத்திற்கு பாதிப்பு ஏற்படுமா?தனிநபர் சுதந்திரம் பாதிக்கப்படுமா? நடுநிலை பேணப்படுகின்றதா? என்றெல்லாம் சிந்தித்து செயலாற்றாமல் இருப்பது ஊடக பண்பினை எடுத்தியம்புவதாக கொள்ள முடியாது.இன்று அதிகரித்து வருகின்ற தவறுக்கான காரணம் முறைப்படியான கட்டுப்பாடுகளுடன் ஊடக ஒழுக்கங்களை பின்பற்றாமையே யாகும்.ஒருவரைப்பற்றி பிடிக்காதுவிட்டால் அவரைப்பற்றி இழிவான விரும்பத்தகாத சொற்பிரயோகங்களை பயன்படுத்துவதும் தனக்கு பிடித்தவர் என்றால் வாய்கிழிய வசைபாடுவதும் அவரைப்புகழ்ந்து பக்கம்பக்கமாக எழுதித்தள்ளுவதும் இன்று மலிந்து விட்டது.இதற்கு காரணம் உரிய முறையில் ஊடகத்தினை கையாளத் தெரியாமையே!.

ஒரு செய்தியை வெளியிடுகின்ற போது அது எந்தளவு தூரம் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை கூட சிந்திக்காமல் தனது இணையத்தள பார்வை அதிகரிக்க வேண்டும். என்ற நோக்கத்தில் சுடச்சுட செய்திவெளியிடுவதனை காணலாம்.தவிர்த்து விட வேண்டிய காட்சிகள்தணிக்கை செய்யப்பட வேண்டிய வசனங்கள் இன்றி அப்படியே பிரசுரிக்கப்படுகின்றது இவையெல்லாம் ஊடக தர்மத்தோடு கடைப்பிடிக்கப்படுவதில்லை. கமராவை கையில் எடுத்தவர்கள் எல்லாம் ஊடகவியலாளர் ஆகிய துர்பாக்கிய நிலைதான் இன்று ஊடகம் நிலைகுலைந்து செல்லக்காரணம். அத்தோடு போட்டியான வியாபாரத்தில் ஊடகங்கள் போட்டி போட்டுக்கொள்கின்ற வியாபார போட்டி நிலையும் முக்கிய காரணமாகும். இதனால் முன்னைய காலத்தில் சிறந்த ஊடக வினைத்திறனுடன் பணியாற்றிய மூத்த ஊடகவியலாளர்கள் ஒதுங்கிக்கொண்ட நிலையில் ஊடகத்தின் பார்வை உதாசீனம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஒருசிலரால் ஊடக தர்மம் பேணப்படாமையினால் ஊடகம் என்ற உன்னதமான சொல் இழுக்கான நிலைக்கு செல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றது மக்களுக்கு சரியான வழிகாட்டலை செய்ய வேண்டிய ஊடகம் நடுநிலை தவறி சென்று கொண்டிருக்கின்றது. இவற்றை எல்லாம் சீர் தூக்கிப்பார்த்து செயற்படுவது ஒவ்வொரு ஊடகவியலாளர்களுக்குமான இன்றைய அவசரமானதும் அவசிய மானதுமான பொறுப்பாகும்..

jkpo; Xir
இல. 184, பஸார் வீதி, மட்டக்களப்பு.
தொ. பேசி இல.: 077 318 00 33 | மின்னஞ்சல் : tamilosai7@gmail.com

**மீன்பாடும் தேனாடாம் மட்டுமாநகரின் மண்வாசனை தாங்கி வருகின்றது தமிழ் ஓசை**

பாடசாலை மாணவர்களிடையே வாசிப்பு எழுத்து திறனை விருத்தி செய்யும் நோக்கில் பாடசாலை மாணவர்களும் தங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்பலாம் தாங்கள் எழுதி அனுப்பும் ஆக்கங்களில் பாடசாலையின் பெயர். வகுப்பு, முழுப்பெயர் என்பவற்றை குறிப்பிட்டுக்கொள்ளவேண்டும்.
அனுப்பவேண்டிய முகவரி

**ஆசிரியர்**
**தமிழ் ஓசை**
**இல: 184, பஸார் வீதி, மட்டக்களப்பு.**

**“நம்பிக்கை வைக்காமல் உலகில் மேலான செயல் ஏதும் சாதிக்கப்படவில்லை”**

# கிழக்கின் நிலைமைகள் தெரியாமல் மக்களை குழப்ப வேண்டாம்

## கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட்



உத்தேச அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக சிறுபான்மை சமூகத்தின் உரிமைகளை வென்றெடுத்து அவர்களுக்கு அரசியல் விடுதலையினைப் பெற்றுக்கொடுக்க எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் மிகச் சாணக்கியமாக நகர்வுகளை முன்னெடுத்து வருகின்ற வேளையில் சிலர் மக்களை உணர்ச்சிவசப்படுத்தும் விதத்தில் பேசி அரசியல் செய்ய நினைத்த காலம் மலையேறிப்போய் விட்டதனை மறந்து விட்டனர். சிறுபான்மைச் சமூகம் சாணக்கியமாக செயற்பட்டு உரிமைகளை வென்றெடுக்கும் காலம் உதயமாகியுள்ளது. எனவே கிழக்கின் நிலைமைகள் தெரியாமல் நல்லிணக்கத்தை வளர்ப்பதாக கூறி சிலர் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்த முயல்கின்றனர் என கிழக்கு முதலமைச்சர் வந்தாறுமூலை பொதுநூலகத் திறப்புவிழாவில் அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர்அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் வெறும் சமூகமற்றும் இனரீதியான உணர்ச்சிவசப்பட்ட பேச்சுக் களினூடாக மக்களை ஏமாற்றலாம் என நினைத்து சிலர் அரசியலை முன்னெடுக்க முயல்கின்றனர் ஆனால் இவற்றுக்கெல்லாம் ஏமாறுவதற்கு மக்கள் இனிமேலும் தயாராக இல்லை என்பதனை அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும் அவற்றையெல்லாம் முறியடித்து இன்று கிழக்கில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் முஸ்லிம்காங்கிரஸும் நல்லிணக்கத்துடன் மாகாணசபைக்கு ஒதுக்கப்படும் நிதியை பிரதேச மற்றும் இனரீதியான பாகுபாடின்றி சமனாக பங்கீடுசெய்து அபிவிருத்திகளை முன்னெடுத்து வருகின்றது மாகாணசபைகள் நிதிகளைப்பெற்றுக் கொள்ளப்படும் சிரமங்கள் மற்றும் ஒதுக்கப்படும் நிதிகள்தொடர்பில் மத்திய அரசாங்கத்தின் அமைச்சரவையில் உள்ளவர்கள் அறிந்திருக்கின்றார்களா என்ற சந்தேகம் தோன்றுகின்றது சிறுபான்மை மக்களை பிரதி நிதித்துவப்படுத்தி அரசியல் செய்வதாக கூறுபவர்கள் நிதிஒதுக்கீட்டில் கிழக்குமாகாணசபை புறக்கணிக்கப்படுவதை அறிந்திருக்கவேண்டும் நாங்கள் எங்கள் தனிப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகளில் கூட இனங்களுக்கும் பிரதேசங்களுக்கும் சமமாக ஒதுக்கீடு செய்து அபிவிருத்திகளை முன்னெடுக்கின்றோம்.ஆகவே இங்குவந்து தனிப்பட்ட அரசியலை முன்னெடுக்க பிளவுகளை ஏற்படுத்த முனையாமல் சிறுபான்மையினர் செறிந்துவாழும் கிழக்கிற்கு அதிக நிதிகளை ஒதுக்க மத்திய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து அங்கு நல்லிணக்கத்தை ஏற்படுத்த முனையவேண்டும் இப்போது நாம் தமிழ்சகோதரர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் குடிநீர்த்திட்டங்கள் மற்றும் வாசிகசாலை என்பவற்றை திறந்துவைத்துள்ளோம் ஆகவே நாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து பிரதேச இனவேறு பாடின்றி அபிவிருத்திகளை முன்னெடுக்கின்றோம். மாகாணத்தில் இன்று அரசியல் தலைமைகள் ஒன்றிணைந்துள்ளோம் அதேபோன்று அதிகாரிகள் மற்றும் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை களை மத்திய அரசாங்கத்தில் அதற்குரிய பொறுப்பில் உள்ளவர்களை விட சிறப்பாக செயற்படுத்திவருகின்றோம். கடந்தகாலங்களில் திட்டமிட்டு பிரிக்கப்பட்ட தமிழ் முஸ்லிம் சமூகங்களை ஒன்றிணைப்பது இலகுவான காரியமல்ல என்ற போதிலும் அவற்றை நாம் இன்று முன்னெடுத்து வருகின்றோம். என முதலமைச்சர் தனது உரையில் தெரிவித்தார்.

# கல்லடி முகத்துவாரம் - திருச்செந்தூர்
# நலன்புரிச்சங்கம் உதயம்

கல்லடி முகத்துவாரம் திருச்செந்தூர் ஆகிய இரண்டு கிராமசேவகர் பிரிவுக்குட் படுத்தப்பட்ட பகுதியினை ஒன்றிணைத்து நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் ஓர் சமூக அக்கறையோடு நலன்புரிச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் தலைவராக எஸ். ஜெயா அவர்களும் செயலாளராக எஸ். மைதிலி பொருளாளராக பி. இந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இச்சங்கத்தின் ஆரம்ப நிகழ்வில் சிறு உரையினை ஆற்றிய சங்கத்தின் தலைவர் அவர்கள் சங்கத்தில் அங்கத்தவராக இருக்கின்ற வர்களின் வீட்டில் ஒருமரண சம்பவம் ஏற்படுகின்ற போது அவசர உதவிகளை இச்சங்கம் பொறுப்பேற்று செயற்படுவதுடன் கிராமத்தில் உள்ளவர்கள் அங்கத்தவர்களாக சேர்ந்து எண்ணிக்கையில் கூடுகின்றபோது அவ் அங்கத்தவர்களின் வீட்டில் ஏற்படும் மரண சம்பவத்தின் போது ஏற்படுகின்ற முழுச்செலவுகளையும் இச்சங்கம் பொறுப்பேற்கும் எனவே அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த சங்கத்தை கட்டியெழுப்பவேண்டிய பாரிய கடமையுள்ளது என தனதுரையில் குறிப்பிட்டார்.

# 5 பெரிது 6 சிறிது



கவிஞர் : வைரமுத்து

சீ... மிருகமே என்று.
மனிதனைத்திட்டாதே
மனிதனே.

எந்த விலங்கும்
இரைப்பைக்கு மேலே
இன்னொரு
வயிறு வளர்ப்பதில்லை.

எங்கேனும்
தொப்பை கிளியோ
தொப்பை முயலோ
பார்த்ததுண்டா?

எந்த விலங்கிற்கும்
சக்கரை வியாதியில்லை
தெரியுமோ?

இன்னொன்று
பறவைக்கு வேர்ப்பதில்லை

எந்த பறவையும்
கூடுகட்டி வாடகைக்கு
விடுவதில்லை

எந்த விலங்கும்
தேவையற்ற நிலம்
திருடுவதில்லை..

கவனி மனிதனே
கூட்டுவாழ்க்கை இன்றும்
குலையாதிருப்பது
காட்டுக்குள் தான்

அறிந்தால்
ஆச்சரியம் கொள்வாய்
உடம்பை உடம்புக்குள்
புதைக்கும்
தொழுநோய்
விலங்குகளுக்கில்லை.

மனிதா இதை
மனங்கொள்

கர்ப்ப வாசனை
கண்டு கொண்டால்
காளைப் பசுவை
சேர்வதில்லை.

ஒருவனுக்கு ஒருத்தி
உனக்கு வார்த்தை
புறாவுக்கு வாழ்க்கை

எந்த புறாவும்
தன் ஜோடியன்றி
பிற ஜோடி
தொடுவதில்லை.

பூகம்பம் வருகுது எனில்
அலைபாயும் விலங்குகள்
அடிவயிற்றில் சிறகடிக்கும்
பறவைகள் இப்போது சொல்
அறிவில்
ஆறு பெரிதா?
ஐந்து பெரிதா?

மரணம் நிஜம்
மரணம் வாழ்வின் பரிசு

மாண்டால்
மானின் தோல் ஆசனம்
மயிலின் தோகை விசிறி
யானையின் பல்
அலங்காரம்
ஒட்டகத்தின் எலும்பு
ஆபரணம்

நீ மாண்டால்...
சிலரை நெருப்பே
நிராகரிக்கும்
என்பதால் தானே
புதைக்க பழகினோம்.

சீ..மிருகமே என்று.
மனிதனைத்திட்டாதே
மனிதனே

கொஞ்சம் பொறு
காட்டுக்குள் என்ன
சத்தம்
ஏதோ மிருகம்
இன்னொரு
மிருகத்தை ஏசுகிறது.
சீ... மனிதனே...

# சத்துருக்கொண்டான் படுகொலையின் 27 வது ஆண்டு நிறைவு










சத்துருக்கொண்டான் படுகொலையின் 27 வது ஆண்டு உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது. ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒன்பதாம் திகதி இந்த அப்பாவிபொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட நாளாகும் சத்துருக்கொண்டான், பனிச்சையடி, பிள்ளையாரடி, கொக்குவில் ஆகிய கிராமங்களில் வாழ்ந்த பொது மக்கள் சத்துருக்கொண்டான் இராணுவ முகாமுக்குள்அழைத்துச்செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். இவற்றில் 5 பிள்ளைகள் விசேட தேவையுள்ள பிள்ளைகள், மேலும் பத்து வயதுக்கும் குறைவான 42 பிள்ளைகள் 85 பேர் பெண்கள், 28 பேர் முதியவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர் இச் சம்பவத்திற்கு காரணமானவர்கள் இருபத்து ஏழு ஆண்டாகியும் இலங்கை அரசாங்கத்தினால் தண்டிக்கப்படவில்லை நல்லிணக்கம், உண்மையை கண்டறியும் விடயத்திற்குள் காலடி வைத்துள்ள நல்லாட்சி அரசாங்கமும் சர்வதேசமும் இந்த படுகொலைக்கான நீதியினைப் பெற்றுத்தரவேண்டும் என படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவுகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



# தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும்

ஏகசத்ரன்

ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இருந்த இலங்கைத் தீவுக்கு 1948 இல் சுதந்திரம் கிடைத்தாலும் இத்தீவில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு அது ஒரு எட்டாக்கனியாகவேதான் இருந்து வந்திருக்கின்றது. ஆங்கிலேயர்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட சுதந்திரத்தினை பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு சமமாக தமிழ் மக்களும் அனுபவிக்க முடியாத வர்களாக சிங்கள தலமைகளால் ஓரம் கட்டப்பட்டார் கள் தொடர்ந்தும் தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகவேதான் இங்கு வாழவேண்டும் என்பதற்காக அரசியல் யாப்புகளும் தயாரிக்கப்பட்டன இவ்வாறு தயாரிக்கப்பட்ட அரசியல் யாப்புகளை அப்போதைய தமிழ் தலமைகள் (தந்தை செல்வா போன்றோர்) தொடர்ந்து எதிர்த்தனர் அஹிம்சை போராட்டங்களையும் 30 வருடங்களுக்கு மேலாக நடாத்தினர் இதனாலும் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்பதால் ஆயுதப் போராட்டம் உருவானது இதுவும் 30 வருடங்களாக தொடர்ந்து பல இலட்சம் உயிர்களை பலியெடுத்த நிலையில் எதுவித தீர்வையும் தமிழ் மக்களுக்கு பெற்றுத் தராத நிலையில் 2009 மே மாதத்துடன் இலங்கை அரசினால் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் தற்போது தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைப் போராட்டமானது அஹிம்சை முறையிலும் சர்வதேசம் மற்றும் ஐ.நா சபையின் உள்ளடங்கலான இராஜதந்திர முறையிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பினால் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது.

மேலே கூறப்பட்ட விடயங்கள் யாவும் இலங்கை வாழ் தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட வரலாறு பற்றியதாகும் இது யாவரும் அறிந்த விடயமாக இருக்கின்றது இவற்றில் கடந்தகால வரலாறுகளைப் பற்றி மிகவும் ஆழமாக ஆராயவேண்டிய தேவை எமக்கு இல்லாவிட்டாலும் தமிழ் மக்களுக்கான உரிமைப் போராட்டத்தின் தற்போதைய நிலை பற்றி ஆராய வேண்டிய தேவை மிகவும் அவசியமாக இருக்கின்றது இதனாலேதான் தமிழ் தேசிய கூட்டமைப்பும் - தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வும் என்ற தலைப்பில் இந்தக் கட்டுரையினை தருகின்றோம்.

முதலில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தோற்றம் பற்றிப் பார்ப்போம். 2001ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கூட்டணியில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (ACTC) ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) ஆகிய கட்சிகள் உள்வாங்கப்பட்டன.

2001ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் சார்பாக அதிக ஆசனங்களைப் பெற்றுக்கொள்கின்ற நோக்கில் தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடிய கட்சிகள் ஒன்று சேர்ந்து புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஒப்பமிட்டு குறித்த தேர்தலில் போட்டியிட்டு 348164 வாக்குகளைப் பெற்று 15 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினை உருவாக்கிய வர்கள் கிழக்கிலங்கை பத்திரிகையாளர் சங்க பிரதிநிதிகள் இதில் முக்கிய பங்கு வகித்தவர் மறைந்த ஊடகவியலாளர் அமரர் சிவராம் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசனையின் பேரில் அவர்களின் ஆதரவுடன்தான் தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஏனெனில் புலிகள் தமிழ் மக்களுக்கான விடுதலையை வேண்டி ஆயும் ஏந்திப் போராடினாலும் அரசியல் ரீதியான பலமும் அவர்களுக்குத் தேவைப்பட்டது. இதனாலேதான் இந்தக் கூட்டமைப்பு உருவாக வேண்டும் என அவர்கள் விரும்பினார்கள் ஆனால் ஆயுதப் போராட்டத்தினை விடுத்து முழுமையாக இக் கூட்டமைப்பு மூலமாக ஒரு தீர்வினை பெற்றுக்கொள்ள லாம் என அவர்கள் எண்ணியதில்லை.

ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உருவாக்கத்தினையும் இவ்வுருவாக்கத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் பங்கு பற்றியும் தமிழ் மக்கள் நன்கு அறிந்திருந்தாலும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்கள் 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பிற்பாடு இடம்பெற்ற ஒரு தொலைக்காட்சிப் பேட்டியில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உருவாக்கத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பங்கு சிறிதும் இல்லையெனக் கூறி இருக்கிறார் இவரின் இந்தக் கருத்து தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலமையின் போக்குப் பற்றி ஒரு போலியான தோற்றத்தினை உருவாக்கி இருந்தது. மேலும் விடுதலைப் புலிகள் தற்போது இல்லை அவர்கள் அழிக்கப்பட்டு விட்டார்கள் அப்படி இருக்க ஏன் அவர்களை இதில் தொடர்புபடுத்த வேண்டும் என அவர் எண்ணினாரோ தெரியவில்லை.

விடுதலைப் புலிகளின் அனுசரணையும் ஆதரவும் கூட்டமைப்பிற்கு இருந்ததனால்தான் பிரச்சாரமோ இன்றி யுத்த காலத்திலும் 348164 வாக்குகளைப் பெற்று 15 ஆசனங்களை கூட்டமைப்பினால் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது இவற்றினை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

பின்பு 22.02.2002 இல் நோர்வேயின் மத்தியஸ்தத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இந்தச் சமாதான உடன்படிக் கைக்குப் பிற்பாடு தமிழ் தேசிய கூட்டமைப்பின் அரசியல் பலம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் பெரிதாக உணரப்படவில்லை காரணம் விடுதலைப் புலிகளே நேரடியாக தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் பல காரியங்களை முன்னெடுத்தார்கள் தங்களது தளபதிகளை நோர்வேயின் அனுசரணையுடன் சர்வதேச நாடுகளுக்கு அனுப்பி அங்குள்ள அரசியல் யாப்பு மற்றும் ஆட்சிமுறைகள் பற்றி ஆராய்ந்து அறிக்கையிட்டார்கள்.

ஆனால் சமாதான உடன்படிக்கை காலத்தில் விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கை அரசினால் பலமுறை உடன்படிக்கை மீறப்பட்டு இரு தரப்பாலும் பலர் கொல்லப்பட்டார்கள் இவற்றைப் பற்றி இவர்களால் உருவாக்கப்பட்ட இலங்கை கண்காணிப் புக் குழுவே (Sri Lanka Monitoring Mission) பல அறிக்கைகளை வெளியிட்டன. இவற்றைப் பற்றி இந்தக் கட்டுரையில் விரிவாக ஆராயவேண்டிய அவசியமில்லை தொடர்ந்தும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் செயற்பாடுகள் பற்றியே ஆராய்வோம்.

பின்பு 2004 இல் நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு 633654 வாக்குகளைப் பெற்று 22 ஆசனங்களைப் பெற்றது. இக்காலப் பகுதியில் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு தமிழ் மக்கள் மத்தியில் அமோக வரவேற்பு கிடைத்திருந்த அதேவேளை கூட்டமைப் பிற்கு பல நெருக்கடிகளும் உருவாகத் தொடங்கியது ஒரு புறம் இலங்கையின் அரச பயங்கரவாதமும் மறுபுறம் தமிழ் தேசிய கூட்டமைப் பிற்குள் இருந்த கடும்போக்குவாத கட்சிகளும் பல நெருக்கடிகளை கூட்டமைப்பிற்கு கொடுத்தவண்ண மிருந்தன இதனால் பல பாரளுமன்ற உறுப்பினர்களும் கூட படுகொலை செய்யப்பட்டார்கள் இறுதிக்கட்ட யுத்தத்தினையும் அப்போதைய ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ மெல்ல மெல்லத் தொடங்கினார் இந்த நேரத்தில் கூட்டமைப்பானது தங்களையே பாதுகாத்துக்கொள்ள முடியாத நிலமைக்கு தள்ளப்பட்டதனால் அரசியல் தீர்வு சம்பந்தமான எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்க முடியாத நிலமைக்கு தள்ளப்பட்டது.

இந்த நேரத்தில் 2006 இல் கிழக்கில் உக்கிரமான இறுதிக்கட்டப்போர் மெல்ல மெல்ல வடக்கை நோக்கி நகர்ந்து 2009 இல் முள்ளி வாய்க்காலில் பல இலட்சம் பேர் உயிரிழப் புடன் முடிவுக்கு வந்தது.

போர் முடிவுக்கு வந்தவுடன் போர் வெற்றியைக் காட்டி மீண்டும் வெற்றி பெறலாம்

என்ற நோக்கில் மகிந்த அரசினால் 08.04.2010 இல் பாராளுமன்ற பொதுத் தேர்தல் நடாத்தப்பட்டது. இந்தத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்கு கிழக்கு பகுதிகளில் போட்டியிட்டு 233190 வாக்குகளைப் பெற்று 14 ஆசனங்களைக் கைப்பற்றிய அதே நேரம் மகிந்த தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு 4846388 வாக்குகளைப் பெற்று 144 ஆசனங்களைக் கைப்பற்றி ஆட்சியமைத்து கொடுங்கோல் ஆட்சி என சொல்லுமளவிற்கு அதிகார துஸ்பிரயோகங்கள் ஆட்கடத்தல்கள் என பலவகையான மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்டதைக் காணலாம்.

நடந்து முடிந்த இந்தத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் மற்றும் அவர்களின் தேர்தல் பிரச்சாரங்கள் எல்லாம் இறுதி யுத்தத்தின்போது படுகொலை செய்யப்பட்ட பல இலட்சம் தமிழ் மக்களுக்கு நீதி வேண்டி ஐ.நாவின் மனித உரிமைப் பேரவையில் கெண்டுவர இருக்கின்ற இலங்கை தொடர்பான தீர்மானத்தில் மகிந்த அரசை குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதற்கு ஒரு ஆணையாகவேதான் தங்களுக்கு வாக்களிக்குமாறு கோரி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டனர் ஆனால் ஐ.நா தொடர்பிலும் அவர்கள் தனக்கும் தனது அரசுக்கும் எதிராக கொண்டுவர இருக்கின்ற தீர்மானம் பற்றியும் இராஜதந்திர முறையில் அறிந்துகொண்ட மகிந்த ஐ.நாவின் மனித உரிமை பேரவையினைச் சமாளிக்கும் நோக்கில் 15.05.2010 இல் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினை நிறுவி போர்க் குற்றங்கள் நடைபெற்றிருந்தால் உள்ளூர் பொறிமுறை மூலமாக தீர்த்துக் கொள்ளலாம் என்பதனை பரிந்துரை செய்து ஐ.நாவை ஏமாற்றினார்.

ஆனால் ஐ.நாவின் அப்போதைய செயலாளர் பான்கீமூன் அவர்களினால் இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் நடந்தவற்றை ஆராய் வதற்காக தருஸ்மன் ஆணைக்குழுவினை நிறுவினார். இந்த குழுவின் அறிக்கையானது 2011 மார்ச் 31ம் திகதி ஐ.நா செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதன் பிற்பாடு 2011 நவம்பர் மாதம் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டு பின்பு அதன் இறுதி அறிக்கை 2011 டிசம்பர் 17ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது தொடக்கம் கடந்த யூலை 2017 இல் வருகை தந்த ஐ.நாவின் அரசியல் விவகார ங்களுக்கான செயலாளர் ஜெவ்றி பெல்ட்மன் (Jeffrey Feltman) வரை பல செயற்பாடுகள் நடைபெற்றிருக்கின்ற போதிலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதி தொடர்பாகவோ நல்லிணக்க பொறிமுறை தொடர்பாகவோ எதுவித ஆக்கபூர்வமான இறுதி முடிவுகளும் இன்னும் எடுக்கப்படவில்லை.

மேலே சொல்லப்பட்ட இந்தச் செயற்பாடுகள் அனைத்தும் ஒருபுறம் இருக்க 2009 மே மாதம் இலங்கையில் நடைபெற்ற இறுதி யுத்தத்திற்குப் பிற்பாடு தமிழ் மக்களுக்கிருந்த ஒரேயொரு பாதுகாப்பு அரண் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் பலம் மாத்திரமே. விடுதலைப் புலிகள் ஆயுத பலத்துடன் இருந்த போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேவைப்பாடோ அல்லது அவர்களின் பாதுகாப்போ தமிழ் மக்களுக்கு அவசியமற்றதாக இருந்தாலும் விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்குப் பிற்பாடு த.தே.கூட்டமைப்பின் தேவைப்பாடு முழுமையாக தமிழ் மக்களுக்குத் தேவைப்பட்டது. ஆனால் விடுதலைப் புலிகள் காலத்தில் இருந்த த.தே.கூட்டமைப்பின் ஸ்திரத் தன்மை அவர்கள் இல்லாத போது படிப்படியாகக் குறைவடையத் தொடங்கி சில துண்டுகளாக உடைந்து தற்போது இன்னும் பல துண்டுகளாக உடைகின்ற நிலையில் உள்ளதனைக் காணலாம்.

இவ்வாறு கூட்டமைப்பிற்குள் உட்பூசல் உருவாவதற்கும் அவை பெரிய பூதமாக வெளியில் வருவதற்கும் என்ன காரணம்? எனவும் தமிழ் மக்கள் மத்தியில் கூட்டமைப்பிற்கு ஆதரவு குறைவடைந்து செல்வதாக தமிழ் மக்களின் அன்றாட செயற்பாடுகள் மூலமாக அறிய முடிகின்றது. இதற்கெல்லாம் என்ன காரணம்? என ஆராய முற்படுவோமானால்.

### அங்கத்துவ கட்சிகளிடையேயான ஒற்றுமை

தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் அங்கம் வகிக்கின்ற கட்சிகளிடையே ஒற்றுமை என்பது சிறிதளவேனும் இல்லை என்றே சொல்லவேண்டும். தமிழ் மக்களுக்கான உரிமையினை வென்றெடுக்கவும் அவர்களின் நலன் சார்ந்து செயற்பட்டு இலங்கைத் தீவில் ஏனைய இன மக்களுடன் தமிழர்களும் சம உரிமைபெற்று வாழ்வதற்கு தேவையான அரசியல் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுக்கவுமே விடுதலைப் போராட்ட குழுக்களும் அரசியல் கட்சிகளும் தமிழ் மக்களிடம் உருவாகி இருந்தன. இவ்வாறு உருவான இயக்கங்கள் கட்சிகள் குழுக்கள் ஆகியவற்றின் ஒரே நோக்கம் தமிழ் மக்கள் தங்களை தாங்களே ஆளக்கூடிய சுயநிர்ணய உரிமையுடன் இலங்கைத்தீவில் வாழ்வதற்கான உரிமையினைப் பெற்றுக்கொள்வது. ஆனால் இந்த நோக்கத்தினை அடைவதுதான் தங்களது ஒரே நோக்கமாகக் கொண்டு இந்த அமைப்புகள் செயற்பட்டனவா? என்றால் இல்லை என்றே பதில் கிடைக்கும். தங்களது ஒரே குறிக்கோளான தமிழ் மக்களுக்கான விடுதலையை மறந்து தங்களுக்குள்ளே சகோதர யுத்தம் செய்து ஒருவரை ஒருவர் அழித்து விடுதலைப் போராட்டமே திசைமாறிச் செல்வதற்கு வித்திட்டார்கள். அப்போது தங்களது நோக்கத்தினை மறந்து ஒவ்வொருவரும் தாங்கள்தான் பெரியவர் தங்களால்தான் விடுதலையை பெற முடியும் என எண்ணினார்களோ அன்றே எமது விடுதலைப் போராட்டம் தோற்றுவிட்டதெனலாம்.

அன்று ஆயுதம் ஏந்திப் போராடியபோது தொடங்கிய இந்த வேற்றுமையானது இன்றும் தொடர்வதனைக் காணலாம். தமிழ் மக்களின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப்போராடி தற்போது அரசியல் கட்சியாக உள்ளவர்களும் அரசியல் கட்சியாக ஆரம்பமாகி அஹிம்சா வழியில் போராடியவர்களும் தற்போது கூட்டமைப்பிற்குள் உள்ளனர்.



அஹிம்சா வழியில் போராடிய கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சியோ அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியோ அல்லது அகில இலங்கை தமிழ் காங்கிரசோ அல்லது தமிழ் தேசிய மக்கள் முன்னணியோ ஆயுதம் ஏந்திப் போராடிய கட்சியையோ அல்லது அவ்வாறு போராடிய ஒரு உறுப்பினரையோ தரக்குறைவாக அல்லது விடுதலைப் போராட்டத்தினை கொச்சப்படுத்தும் வகையிலோ கூறுவதைத் தவிர்க்க வேண்டும்.

நாங்கள் தமிழர்கள் எனவும் எமது நோக்கம் தமிழர் உரிமை ஒன்றே எனக்கூறி ஒரே குடையின் கீழ் யாவரும் வரவேண்டும். ஒரே கட்சியின் கீழ் வரவேண்டும் அல்லது தமிழ் தேசிய கூட்டமைப்பினைப் பதிவு செய்து யாவரும் அதில் அங்கத்தவராக வேண்டும். சகல கட்சிகளும் சேர்ந்து ஒரு தலைமைத்துவத்தினை தெரிவு செய்ய வேண்டும். சகல தமிழ் மக்களையும் கட்சியில் அங்கத்துவம் பெற வைத்து கட்சியை மக்கள் மயப்படுத்தி அதனூடாக அனைவரையும் வாக்களிக்கச் செய்து தமிழ் மக்களின் விகிதாசாரத்திற்கேற்ப அரசியல் பிரதி நிதித்துவத்தினைப் பெற வேண்டும். (பாராளுமன்றம் மாகாண சபை உள்ளூராட்சி மன்றங்கள்)

தமிழரசுக் கட்சிதான் கூட்டமைப்பிற்கு தலைமை தாங்க வேண்டுமென்றோ அல்லது அனைவரும் இந்தக் கட்சியில்தான் இணைய வேண்டுமென்றோ கருதக்கூடாது. மேலும் அந்தக் கட்சியை கூட்டமைப்பிற்குள் இணைக்கக்கூடாது இந்தக் கட்சியின் தலைவர் எமது துரோகி இவரின் கட்சி எப்படி எமது கூட்டணில் சேருவது என்றெல்லாம் யாருமே எண்ணக்கூடாது. பல இலட்சம் தமிழர்களை படுகொலை செய்த கட்சியுடன் இணக்க அரசியல் செய்யலாம் தமிழ் மக்களை காட்டிக் கொடுத்தான் அல்லது படுகொலை செய்தான் என சந்தேகிக்கப்படுபவர்கள் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சிகளை கூட்டமைப்பினுள் இணைக்கக்கூடாதா? எனவே கட்சிகளிடையேயான அல்லது தமிழ் மக்களுக்கிடையிலான ஒற்றுமை அரசியல் தீர்விற்கு வித்திடும். இதற்கு பாரிய நிதி உதவியோ அல்லது ஐ.நா சபையின் ஆதரவோ தேவையில்லை. எமக்குள் எமது மனதிற்குள் ஏற்படுகின்ற மனிதாபிமான பரஸ்பர நல்லிணக்கமே போதும்.

### பாதிக்கப்பட்ட மக்களுக்கான இழப்பீடு அல்லது நீதிப் பொறிமுறை

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான இழப்பீடு அல்லது அவர்களுக்கான நீதிப் பொறிமுறை என்ற விடயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்கு என்ன அளவில் உள்ளதென்பதனை நோக்குவோமானால். மிக மிக குறைவென்றே சொல்ல வேண்டும். ஏனெனில் அதற்கான பல காரணங்களை இங்கு குறிப்பிடுகின்றேன்.

1. ஐ.நா சபையினால் கொண்டுவரப்பட்ட நீதிப் பொறிமுறையினை செயற்படுத்துவதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் அழுத்தம் போதாது. மாறாக இலங்கை அரசுக்கு கூட்டமைப்பானது ஆதரவாக செயற்படுகின்றது அதாவது நல்லாட்சி அரசை பாதுகாப்பதேதான் கூட்டமைப்பின் பிரதான நோக்கமாக உள்ளதைக் காணலாம்.
2. காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத் தினை இயங்கச் செய்வதற்கான கூட்டமைப்பின் அழுத்தம் போதாது. காணாமல் ஆக்கப்பட்டோர் எனக் கருதப்படுவோர் இருக்கிறார்களா? அல்லது இல்லையா? என்பதனைக் கண்டறிவதற்கு கூட கூட்டமைப்பினால் முடியாமல் உள்ளது.
3. அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் கூட்டமைப்பு எடுத்ததாக தெரியவில்லை.
4. இராணுவத்தின் வசமுள்ள தமிழ் மக்களின் காணி விடுவிப்பு தொடர்பான செயற்பாடு மந்தகதியில் இதற்கான நடவடிக்கை போதாது.
5. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தொடர்பான சரியான புள்ளி விபரங்கள் எதுவும் தமிழ் தேசிய கூட்டமைப்பிடம் இல்லை. யுத்தம் முடிவுற்று 8 வருடங்கள் கடந்தும் இவற்றினை சேகரிப்பதற்கான எந்தவித நடவடிக்கையினையும் மேற்கொள்ளவில்லை.
6. வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கான வாழ்வாதார மற்றும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் எதனையும் இதுவரை கூட்டமைப் பானது தயாரிக்கவில்லை.

தொடர்ச்சி பக்கம் 08இல்....

### மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.பி.முகைதீன் எழுதிய

# சாதாரண பொதுமக்களும் விளங்கக்கூடிய விதத்தில் சட்டங்கள்



நீதி என்பது ஒரு நபர் நியாயமாக செயற்படுவதைத் தவிர வேறு ஒன்றுமில்லை. மேலே குறிப்பிட்ட விடயம் நீதி மன்றத்தில் அமர்ந்திருக்கும் நீதிபதிக்கு மாத்திரமல்ல மாறாக மனித சமூதாயத்தின் ஒவ்வொரு மனித பிறவிக்கும் ஏற்புடையதான ஒன்றாகும். இந்த விடயத்தை மேலும் அவதானிக்கும் போதும் ஒவ்வொரு பிரஜையும் தங்களுடைய நாளாந்த நடவடிக்கைகளை நீதியாகவும் நேர்மையாகவும் முன்னெடுப்பார்களேயானால் பிரச்சினைகளும் பிணக்குகளும் ஏற்படுவதை முற்றாக தடை செய்ய முடியும். இதனால் பொதுமக்கள் பொலிஸ் நிலையங்களுக்கோ அல்லது நீதி மன்றத்திற்கோ அல்லது வைத்தியசாலைக்கோ அல்லது சிறைச்சாலைக்கோ செல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது.

எந்தப் பிரஜை ஒருவர் நீதி முறைகளுக்கு அப்பால் சட்டத்தைக் கையில் எடுத்து செயற்படுகின்றாரோ அந்தக் கட்டத்தில் குற்றங்கள் உருவாக்கப்படுகின்றன. இத்தகைய இக்கட்டான சூழ்நிலைகளில் குற்றத்தை புரிந்த நபரும் குறித்த குற்றச்செயலினால் பாதிக்கப்பட்ட நபரும் தங்களுடைய வாழ்நாட்களை பொலிஸ் நிலையங்களிலும் நீதிமன்றங்களிலும் வைத்தியசாலை களிலும் சிறைச்சாலைகளிலும் கழிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. நீதி முறையாக செயற்படுவது என்பது ஒரு நீதிமன்றத்திற்கு மாத்திரம் அல்ல முழுச் சமுதாயத்திற்கும் ஏற்புடையதாகக் கூடியதொன்றாகக் காணப்படுகின்றது.

சிலவகையான குற்றச்செயல்களில் முற்றிலும் எதிர்பாராத விதமாக சிலர் உள்வாங்கப் படுகின்றார்கள். இதே போன்று சில நபர்கள் குற்றம் ஒன்றை புரியவேண்டும் என்ற குற்றமனதுடன் குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இந்த இரு வகை நபர்களும் பொலிஸாரினால் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு நீதி மன்றங்களில் ஆஜர்படுத்தப் படுகிறார்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில் ஒரு குறித்த சந்தேகநபருக்கு பிணை வழங்குவது தொடர்பில் நீதிமன்றங்களின் செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பில் சில சட்ட ஏற்பாடுகள் நடைமுறையில் உள்ளன. குறித்த சட்ட ஏற்பாடுகளை அனுசரித்து குறித்த சந்தேகநபர்களுக்குப் பிணையா? அல்லது விளக்க மறியலா? என்பதை நீதிமன்றம் தீர்மானிக் கும். அவ்வாறு குறித்த தீர்மானம் ஒன்றை நீதிமன்றம் செய்வதற்கு பொருத்தமான ஒரு வழிகாட்டல் நூலை சாதாரண பொதுமக்களும் விளங்கக்கூடிய விதத்தில் எழுதி வெளியிட வேண்டும் என்பது என்னுடைய நீண்ட நாள் கனவாக இருந்தது.அந்த எண்ணம் நாட்டில் உள்ள ஒவ்வொரு தமிழ் பேசும் மக்களின் இல்லங்களுக்கும் சென்றடைய வேண்டும் என்பதோடு இதனை படிப்பதன் மூலம் சாதாரண பொதுமக்களும் பிணைகள் பற்றிய சட்டங்களை நன்றாக அறிந்து கொள்ளமுடியும். இச்சட்டவிளக்கம் பற்றி மட்டக்களப்பு மாவட்டநீதிமன்ற நீதிபதி எம். பி.முகைதீன் எழுதியவற்றினை தமிழ்ஓசை பத்திரிகையின் வாயிலாக தருகின்றோம்.

**ஒரு நபர் கைது செய்யப்படுவது தொடர்பான சட்ட ஏற்பாடுகள்.**

பிணைகள் தொடர்பான சட்ட ஏற்பாடுகளை விரிவாக ஆராய்வதற்கு முன்னதாக ஒரு நபர் ஏன் கைது செய்யப்படுகின்றார்? எவ்வாறு கைது செய்யப்படுகின்றார்? அவரது கைதுக்கான காரணம் என்ன? அவருடைய கைது சட்டரீதியானதா? அல்லது சட்டத்துக்கு அப்பாலான கைதா என்பது தொடர்பில் விரிவாக ஆராய வேண்டியிருக்கின்றது.

மேலே விபரிக்கப்பட்ட இவ்விடயங்கள் ஒரு மனிதனின் உரிமை மற்றும் அடிப்படை உரிமைகளோடு சம்மந்தப்பட்ட விடயமாக இருப்பதால் இதனோடு தொடர்புடைய நபர்கள் மிகவும் நுணுக்கமாகவும் அவதானத்துடனும் செயற்பட வேண்டியிருப்பது அவசியமாகின்றது.

ஒரு தனி மனிதன் பின்வரும் நான்கு வகையான சந்தர்ப்பங்களில் அவனுடைய சுதந்திரத்தை இழந்தவனாக காணப்படுகின்றான்.

1. பொலிஸாரின் கைதுக்கு உட்பட்டு அவர்களின் பாதுகாப்பில் உள்ள நபர்கள்.
2. பாதுகாப்புக் காரணத்துக்காக தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட நபர்கள்.
3. வழக்கின் விளக்கம் ஒன்று நடைபெறுகின்ற போது விளக்க மறியலில் வைக்கப்பட்ட நபர்கள்.
4. குற்றச்சாட்டுக்கு ஆளாகி குற்றச்சாட்டு நிருபிக்கப்பட்ட பிற்பாடு மறியல் தண்டனைக்கு உட்பட்ட நபர்கள்.

மேலே விபரிக்கப்பட்ட இவ்வாறு அடக்கு முறைக்குள்ளாக்கப்பட்டாலும் கூட அவர்களுடைய தனிமனித உரிமைகளும் அடிப்படை மனித உரிமைகளும் உட்பட்ட நபர்களாக கருதப்பட வேண்டியது அவசியமாகின்றது.

மனித உரிமை என்பது ஒரு மனிதனுக்கு அவசியமான உரிமைகள் இயற்கையாகவே அமைந்திருக்கின்ற தன்மைகளை எடுத்துக் காட்டுகின்றது.

அடிப்படை உரிமை என்பது ஒரு நாட்டின் அரசியல் அமைப்பு சட்டத்தின் மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்ட எழுத்துருவிலான ஒரு மனிதனுக்கு அவசியமாக வழங்க வேண்டிய அடிப்படை மனித உரிமைகளாகும். இவை இரண்டும் மேலே விபரிக்கப்பட்ட நபர்களுக்கும் கையாளப்படுவது கட்டாயமாகும்.

தொடரும்....

# இடைநடுவில் கைவிடப்பட்ட பொது நூலகத்தின் கட்டுமான வேலைகளை நிறைவு செய்ய நிதி ஒதுக்க அமைச்சர் இணக்கம்

### பாராளுமன்ற உறுப்பினர் ஞா. ஸ்ரீநேசன் தெரிவிப்பு





மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர். பைசர் முஸ்தபா அவர்களுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையினூடாக மட்டக்களப்பு நகரத்தில் நிர்மாணிக்கப்பட்டு இடைநடுவில் கைவிடப்பட்ட, பொது நூலகத்தின் தரைத்தளத்தின் கட்டுமான வேலைகளை நிறைவு செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய அமைச்சர் இணங்கியதுடன், அதற்கான மதிப்பீட்டினை விரைவில் செய்ய மட்டக்களப்பு மாநகர சபைக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார். மதிப்பீடு விரைவில் சமர்பிக்கப்படின் இந்த நிதி ஆண்டிலேயே நிதி ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. இந்த பொது நூலகக் கட்டடத்தினை முழுமையாக கட்டி முடிக்கத் தேவையான முழு முயற்சியினையும் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. ஸ்ரீநேசன் அவர்கள் முன்னெடுத்து வருவதுடன் தான் மேடைப்பேச்சுகளில் மட்டும் அல்லாது எமது பிரதேசத்தினைச் சகல வழிகளிலும் முன்னேற்ற வேண்டும் என்பதே எனது எதிர் பார்ப்பாகும் என தெரிவித்தார்.




# தேசிய அரசியற்கட்சியாகியது

# நல்லாட்சிக்கான தேசிய முன்னணி

இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளில் ஒன்றாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணி (NFGG) பதிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை தேர்தல் ஆணைக்குழு இந்த அங்கீகாரத்தை கொழும்பு தேர்தல் ஆணையகத்தில் வைத்து உத்தியோக பூர்வ கடிதத்தினை சூேபுப தலைமைத்துவ சபை பிரதிநிதிகளிடம் கையளித்துள்ளது.

நல்லாட்சி என்ற அரசியல் இலட்சியத்தோடு இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது அரசியற்கட்சியான நல்லாட்சிக்கான தேசிய முன்னணி கடந்த 11 வருட காலமாக பிராந்திய மற்றும் தேசிய அரசியலில் தொடர்ந்து தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. 2006 ஆம் ஆண்டு காத்தான்குடியில் தாபிக்கப்பட்ட இக்கட்சி நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் (PMGG) என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வந்தது. பின்னர் 2013 ஆம் ஆண்டு முதல் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி (NFGG) என்ற பெயரில் தேசிய அரசியல் வேலைத் திட்டங்களில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கியது.

2006 ஆம் ஆண்டு மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற காத்தான்குடி நகர சபைத் தேர்தல்களில் போட்டியிட்டு கணிசமான ஆதரவினைப் பெற்றுக் கொண்ட NFGG காத்தான்குடி நகர சபையின் பிரதான எதிர்கட்சியாக தொடர்ந்தும் செயற்பட்டு வந்தது. அதேபோல் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மட்டக்களப்பு, திருகோண மலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் NFGG போட்டியிட்டு குறைந்தளவு வாக்கு வித்தியாசத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாகாணசபை பிரதிநிதித்துவத்தை பெறத் தவறியிருந்தது.

இதனைத் தொடர்ந்து 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் (TNA) புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை செய்து கொண்ட NFGG தனது ஒரு வேட்பாளரை அந்தத் தேர்தலில் போட்டியிடச் செய்தது. தேர்தலின் பின்னர் குறித்த ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழ் தேசிய கூட்டமைப்பினால் வழங்கப்பட்ட போனஸ் ஆசனத்தின் ஊடாக வடமாகாண சபையில் ஒரு பிரதி நிதித்துவத்தையும் பெற்றுக்கொண்டது. அதன் பின்னர் கடந்த 2015 இல் நடைபெற்ற ஊவா மாகாண சபைத்தேர்தலில் ஐ.தே.கட்சியுடன் (UNP) புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்ட NFGG பதுளை மாவட்டத்தில் அரசியல் வேலைத் திட்டங்களில் ஈடுபட்டது.

இதனைத் தொடர்ந்து கடந்த ஆட்சி மாற்றத்திற்கான பொது எதிரணியொன்று ஆரம்பிக்கப்பட்ட வேளையில் முஸ்லிம் சமூகத்தில் இருந்து முதன் முதலாக அப்பொது எதிரணியில் இணைந்து முன்னணியில் நின்று பங்களிப்புச் செய்த கட்சியாகவும் NFGG காணப்பட்டது. ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து கடந்த 2015 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் (SLMC) செய்து கொள்ளப் பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் போட்டியிட்டது. இவ்வாறாக மட்டக்களப்பில் களமிறக்கப்பட்ட NFGG யின் வேட்பாளர் 12468 வாக்குகளைப் பெற்று மாவட்டத்தில் இரண்டாம் இடத்தையும், திருகோணமலையில் போட்டியிட்ட NFGG வேட்பாளர் 14697 வாக்குகளைப் பெற்று நான்காம் இடத்தையும் பெற்றனர்.

**காத்தான்குடி நிருபர்**

இவ்வாறு கடந்த 11 வருடங்களாக இந்நாட்டில் அர்த்தமுள்ள நல்லாட்சியொன்றை உருவாக்கு வதற்கான தீவிர அரசியல் உழைப்பினை செய்து வரும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தற்போது அங்கீகரிக்கப்பட்ட தேசிய அரசியற் கட்சியாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக விண்ணிப்பித்திருந்த 94 அரசியற்கட்சிகளில் 6 கட்சிகள் மாத்திரமே தேர்தல் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் நிலையில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணிக்கு இந்த தேசிய அங்கீகாரம் கிடைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

■ ■ ■

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான கிராம சக்தி மக்கள் இயக்கம்

## தொடர்பாக இரண்டு நாட்கள் நடைபெற்ற பயிற்சிப்பட்டறை








அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான கிராமசக்தி மக்கள் இயக்கம் தொடர்பான இரண்டுநாள் பயிற்சிப்பட்டறை மட்டக்களப்பு மாவட்ட செயலக த்தில் இடம்பெற்றது. ஊக்கத்துடன் பலத்துடன் ஒழுங்குமுறையுடன் ஏற்பாடு செய்யப்பட்டதான வறுமையிலிருந்து மீண்டு அபிவிருத்தியின் பாதையில் பயணிக்கும் இலங்கை மக்கள் எனும் நோக்கமும் இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டாகும் போது சமூக கட்டுப்பாட்டு கிராம அலுவலர் பிரிவுகள் 5000 உருவாக்குதலும் அச்சமுகத்திற்கு தகவல்கள் தீர்மானம் எடுக்கும் உரிமை மற்றும் வளங்களைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் அந்த மக்களது அடிப்படைத் தேவைகளையும் அதிகரித்துச் செல்லும் தேவைகளையும் தனிநபர் ரீதியாகவும் குழுவாகவும் அடைந்து கொள்வதற்கான இலகுபடுத்த லைப் பெற்றுக் கொடுத்தல் என்ற செயற்பனியுடன் தகவல் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வளங்களை மக்களுக்கு பெற்றுக்கொடுத்து சமமான பங்கேற்பு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்து தங்கிவாழும் மனப்பாங் கில்லாத அரச தனியார் மற்றும் சமூக ஒத்துழைப்புடன் அபிவிருத்தியை அடைந்து கொள்ளக்கூடியவாறான தளத்தினை கிராமத்தில் உருவாக்குதல் கிராமசக்தி கொள்கைச்செயற்பாடாகும். இந்த திட்டத்தினைப்பற்றி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இரண்டுநாள் கருத்தரங்கு இடம்பெற்றது இதன்போது விரிவுரையாளர்களாக மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன் மாவட்டச்செயலக பிரதம கணக்காளர் எஸ். நேசராசா மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.சுதர்சன் மாகாண திட்டமிடல் செயலகத்தின் பிரதி பிரதம செயலாளர் வி. மகேந்திரராஜா அம்பாறை திட்டமிடல் பணிப்பாளர் எஸ். அன்வர்டீன் ஜனாதிபதி செயலக ஆலோசகர் எஸ். நாகனந்த ஆகியோர் விரிவுரைகளை மேற்கொண்டனர்.



# ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டக் காரியாலயம் பீல் மார்ஷல் சரத் பொன்சேகாவினால் திறந்துவைப்பு





ஐக்கிய தேசிய கட்சியின் மட்டக்களப்பு மாவட்டக் காரியாலயம் அண்மையில் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் பீல் மார்ஷல் சரத்பொன்சேகாவினால் கல்லடியில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வானது மாவட்ட ஐக்கியதேசிய கட்சியின் அமைப்பாளர் வேலுப்பிள்ளை மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது இதன்போது அவர்கருத்து தெரிவிக்கையில்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும், பிரதமருமாகிய ரணில் விக்கிரமசிங்கவின் பூரண அனுமதியுடன் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதேச அபிவிருத்தி அமைச்சருமாகிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அவர்களின் வழிகாட்டலுடன் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் கபீர் ஹாஷிம் ஆகியோரும் சேர்ந்து மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராக என்னை நியமித்துள்ளனர். மிகவும் அதிகாரம் மிக்கதும் செல்வாக்கு மிக்கதுமான இப் பதவியை கொண்டு முடிந்தளவு மக்களுக்கு சேவையாற்ற விரும்புகிறேன். அதுமட்டுமல்லாது இனிவரும் காலங்களில் இளைஞர், யுவதிகள் மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கு, பல வேலை வாய்ப்புக்களையும் வாழ்வாதார உதவிகளையும் வழங்குவதற்கு ஏற்ற வாய்ப்பாக அமையும் என்ற நோக்கத்திற்காக இந்த அரசியல் பயணத்தில் இறங்கியுள்ளேன் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பிரதேசங்களில் காணப்படும் குறைகள் மற்றும் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திப் பணிகள் என்பவற்றை எனது இப் பதவியை கொண்டு முடிந்தளவு தீர்த்துவைக்க முன்வருவேன் எனத்தெரிவித்தார்.

# மூதூர் பிரதேசத்தில் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் அரச அதிகாரிகளினால் பழிவாங்கப்படுகின்றனர்

மூதூர் பிரதேசத்தில் கடந்த கால போர் சூழல் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்தும் அப்பிரதேச அரச அதிகாரிகளினால் வாழ்வாதார விடயங்களில் புறக்கணிக்கப்பட்டு வருவதாக இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் மூதூர் தெற்கு பிரதேசத்தை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை 2007ம் ஆண்டு காலப்பகுதியில்கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார். அதேபோன்று மூதூர் கிழக்கு பிரதேசத்தை சேர்ந்த பெண்ணொருவர் தனது கணவர் மற்றும் மூன்று பிள்ளைகளை இழந்துள்ளார். இவரது குடியிருப்புக் காணி கடந்த 1986ம் ஆண்டு இராணுவத்தினால் கைப்பற்றப்பட்டு 2014ம் ஆண்டு கையளிக்கப்பட்டது அப்போது அக் குடியிருப்பில் உள்ள கட்டடங்கள் அனைத்தும் முற்றாக அழிக்கப்பட்டு வெற்றுக் காணியாக அவரிடம் கையளிக்கப்பட்டது.இவற்றுக்கான இழப்பீடு வாழ்வாதார உதவித்திட்டங்களை பெறுவதற்கு மூதூர் பிரதேச செயலகத்திற்கு சென்று பலமுறை விண்ணப்பித்தும் அப்பிரதேசசெயலாளர் மற்றும் கிராமசேவையாளர் ஆகியோரினால் தாங்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் வேறுவிதமாக பழிவாங்கப்படுவதாகவும் அக் கிராமத்தில் பாதிக்கப்பட்ட இரண்டு தாய்மார்களும் தன்னிடம் முறையிட்டதாக அவர் தெரிவித்தார்.



இவ்வாறு பாதிக்கப்பட்ட இவர்களுக்கான வாழ்வாதார திட்டங்களை செவ்வனே நிறைவேற்றிக் கொடுக்க சம்மந்தப்பட்ட அதிகாரிகள் ஏன் முன்வரவில்லையென்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். தமிழ் அரசியல்வாதிகளும் இவர்களின் நிலையினை நன்கு அறிந்து கொண்டு அரச அதிகாரிகளுக்கு அவர்களின் நிலையினை எடுத்துக்கூறி தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டிய கடப்பாட்டில் இருந்து விலகிச்செல்வது வேதனைக்குரிய விடயமாகும் என மூதூர் பிரதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு வாழ் மக்களின் நீண்டகால தேவை பூர்த்தியாகியுள்ளது

மட்டக்களப்பு வாழ் மக்களின் நீண்டகாலத் தேவையாக இனங்காணப்பட்ட அபிவிருத்திப் பணிகள் பூர்த்தியாகிக் கொண்டிருக்கின்றது. வாழ்வாதாரம் மற்றும் ஏனைய அபிவிருத்திப்பணிகள் மாவட்ட செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை அனைவரும் அறிந்த விடயம். மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் மக்களின் தேவைப் பாடுகள் குறித்து மாவட்ட செயலகத்தினால் இனங் காணப்பட்டு அதற்கான திட்ட வரைபுகள் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளரால் அரசஅதிபரின் வழிகாட்டலில் தயாரிக்கப்பட்டு தேசிய திட்ட மிடல் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது. அவ்வாறு கையளிக்கப்பட்ட 20689 மில்லியன் ரூபா செலவிலான 21 திட்டங்கள் குறித்த திணைக்களத்திடம் கையளிக்கப்பட்ட போதிலும் அவற்றில் 9473 மில்லியன் ரூபா செலவிலான 8 திட்டங்களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சிபார்சுடன் அமைச்சரவையின் அனுமதி மாவட்ட




செயலகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த எட்டு திட்டங் களிற்கான பெறுகை நடைமுறை விலை மனுக்கோரல் கோருவதற்கான நடவடிக்கையினை தேசியநல்லிணக்க அமைச்சு மேற்கொண்டு வருவதாக மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

## தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வும்... தெடர்ச்சி...

**தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு.**

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்ற விடயத்தில் த.தே.கூட்டமைப்பின் செயற்பாடு பற்றி கூட்டமைப்பிற்குள் அங்கம் வகிக்கின்ற பங்காளிக் கட்சிகளுக்கே தெரியாமல் இருப்பது வியப்பாக உள்ளதைக் காணலாம். கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் ஊடக பேச்சாளருமான சுமந்திரனுக்கும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஆகிய இருவருக்குமே இந்த விடயம் பற்றி யாவும் தெரியும். புதிய அரசியல் அமைப்பு உருவாக்கம் நிறைவு பெற்றாலும் அவை இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இந்த அரசியலமைப்பு நிறைவேற்றப்படுவதற்கு தென்னிலங்கையில் பாரிய எதிர்ப்பு கிளம்பி யுள்ளதைக் காணலாம். மகிந்தவின் கூட்டு எதிரணி பாரிய எதிர்ப்பினை தெரிவித்துள்ளது. த.தே.கூட்டமைப்பானது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வின் ஒரு பகுதியாக இந்த அரசியல் யாப்பினை கருதுவது கானல் நீர் போன்று எண்ணுவதற்கு சமமாகும்.

சம்பந்தன் ஐயா அவர்கள் 2016 இற்குள் தீர்வு கிடைக்கும் என தீர்க்கதரிசனமாக கூறி இருந்தார். ஆனால் 2017 ஆம் ஆண்டும் முடிவடையப் போகின்றது எந்தத் தீர்வுமே வருவதாக இல்லை. வருவதற்கான எந்தவிதமான அறிகுறிகளுமே தென்படவில்லை.

சிங்கள பௌத்த ஏகாதிபத்திய அரசு ஒருநாளும் தமிழ் மக்களுக்கான எதுவித அரசியல் தீர்வினையும் வழங்காதென்பது தீர்க்கதரிசியான சம்பந்தன் ஐயாவிற்கு தெரியாதா எல்லாமே அவருக்கு நன்றாகத் தெரியும். அப்படியானால் ஏன் அவர் இவ்வாறு நடந்துகொள்கின்றார் என கேட்கிறீர்களா? பாவம் அவர் வயது போன காலம் அவரால் இதனைத் தவிர ஒன்றுமே செய்ய முடியாது.

வடக்கு மாகாண சபைக்கு தமிழரசுக் கட்சி சார்பாக முதல்வர் வேட்பாளராக களமிறக்கி வெற்றிபெற வைத்த நீதியரசர் விக்கியே தமிழரசுக் கட்சிக்கு துரோகம் இழைத்தது மாத்திரமின்றி அந்த மாகாண சபையையே சிறந்த ஊழல் சபையாக மாற்றி சாதனை படைத்துள்ள நிலையில் ஒரு சட்டத்தரணியான ஐயாவால் என்ன செய்ய முடியும் தமிழ் மக்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும் என்று கூறியவர் தந்தை செல்வா அவர்கள்.


தொடரும்...

# fypAfj;jpYk; njhlIUk; flTspd; mjprak;

# கடலரசன் திருக்கோயில்

பேரலைகள் ஏற்படுவதற்கு முன்பு கடல் சில பகுதிகளில் சற்று உள்வாங்கும். ஆனால் இந்த கோலியாக் கடற்கரையைப்போல தினமும் பத்து மணிநேரம் முப்பது அடி ஆழம் வரை வற்றிப்போகும் அதிசயம் வேறெங்கும் நிகழவில்லை. இந்துக் களின் கோயில்கள் அனைத்திலும் இறைவன் இருக்கின்றான். அதைப்போல இந்தக்கடல் கோயிலிலும் இறைவன் இருக்கின்றான். கடலும் அவனே மலையும் அவனே உலகம் பிரபஞ்சம் அனைத்தும் அவனே அவன் இருக்கும் இடம் தேடி அவனை வணங்குவது மனிதர்களாகிய நமது கடமையாகும்

நாம் ராகவேந்திர திரைப்படத்தை பார்க் கின்றோம் ராகவேந்திரரின் ஒரு சீடருக்காக ஆற்றுநீர் விலகிக் கொண்டது. கடல் நீர் விலகிக் கொண்டு வழிவிடும் காட்சிகள் புராண வரலாறுகளில் பல உண்டு குமரிமாவட்டத்தில் ஐயாவை குண்டர் கடல் வழிவிட அவர் கடலுக்குள் சென்றதாக வரலாறு உள்ளது. இதையெல்லாம் நம்பாதவர்கள் பலர் உண்டு . அத்தகையோருக்காக ஒரு அதிசயம் குஜராத் மாநிலம் பாவ் நகரின் அருகில் கோலியாக் கடற்கரையில் தினமும் நடந்துகொண்டிருக்கின்றது சென்றுபாருங்கள் முடியவில்லை என்றால் இண்டர்நெட்டில் பாருங்கள் அதிசயம் தினமும் நடந்துகொண்டிருக்கின்றது. கடற்கரையிலிருந்து ஒரு கிலோமீட்டர் உள்ளே!சுமார் முப்பது அடி உயரமான கல்லால் ஆனகொடி கம்பத்துடன் கூடிய ஐந்து சிவலிங்கங்களை



கொண்ட சிவன் கோயில்! கோயிலின் பெயர் நிஷகளங்கேஷ்வர் ஆலயம்!. முப்பது அடி உயரகொடிக் கம்பத்தின் உச்சிவரை நீர்மட்டம் இருக்கும். தினமும் நண்பகல் ஒரு மணி முதல் இரவு 10.00 மணிவரை கடல் விலகிக்கொள்ளும் உள்வாங்கிக் கொள்ளும் தினமும் பத்துமணி நேரம் கடல் உள்வாங்கிக் கொள்ளும் அப்படி கடல் உள்வாங்கும் போது பக்தர்கள் கடலுக்குள் இருக்கும் சிவன் கோயிலுக்கு சென்றுவழிபடுகிறார்கள்

கோயிலின் தரைகருங்கற்கள் பதிக்கப்பட்டவை கோயிலுக்கு கூரை இல்லை வானமே கூரை என ஐந்து சிவலிங்கங்கள் அற்புதமாக உள்ளன முப்பது அடி உயரக்கல்லால் ஆன கொடிக்கம்பம் தான் கோயிலின் உயரத்தை குறிக்கின்றது. இரவு பத்து மணிக்குப் பிறகுகோயில் முழுமையும் கடலால் கொள்ளப்பட்டுவிடுகிறது. இரவு பத்து மணியிலிருந்து மறுநாள் நண்பகல் ஒரு மணிவரை முப்பது அடிநீர் மட்டத்தின் அடியில் சிவன் கோயில் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது!. கடுமையான அலை வீசிக் கொண்டிருக்கின்றது. பகல் ஒரு மணி ஆனால்



கடல் நீர் தானாகவே உள்ளே போய்விடுகிறது. முப்பதுஅடி உயரம் குறைந்து குறைந்து தரைமட்டம் தெரிகிறது. கருங்கற்கள் பதியப்பட்ட தரைப்பகுதியில் ஆலயம் பளிச்சிடுகிறது. ஐந்து சிவலிங்கங்கள். கல்லினால் ஆனகொடிக் கம்பத்தில் கொடி பறக்கிறது. உப்பு நீரில் நனைந்திருந்த கொடிதான். தினமும் நனையும் கொடி.எனினும் எவ்வித பாதிப்பும் இல்லாமல் அன்று ஏற்றிய புதுக் கொடியைப் போல பட்டொளி வீசி பறக்கிறது. வருடம் ஒருமுறை தான் கொடியேற்றம் செய்யப்படுகின்றது.எனினும் தினமும் இரவு பத்துமணி முதல் நண்பகல் ஒரு மணி வரை நனைந்து நண்பகல் ஒரு மணி முதல் இரவு பத்து மணி வரை பட்டொளி வீசி பறக்கிறது கோயிலை கடல் மணல் மூடிக்கொள்ளவில்லை தினந்தோறும் கடல் உள்வாங்கியதும் கடலுக்குள் செல்லும் பக்தர்கள் பஜனைகள் செய்து சிவனை வணங்குகிறார்கள். மாலைகளை சாத்தி வணங்கு கிறார்கள். கற்பூரம் ஏற்றி வணங்குகிறார்கள்.அரஹர மகாதேவா! எனும் கோஷம் எழுகிறது. இறைவன் சிவன் அருளுகிறார். புராண வரலாறுகளில் சொல்லப் படுவது உண்மை என்பதற்கு இந்தக் கோயில் ஒரு எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

எத்தனையோ சுனாமி பேரலைகளால் இந்த ஆலயம் பாதிக்கப்படவில்லை. கல்லினால் ஆன சுமார் முப்பது அடி உயர கொடிமரமும் பாதிக்கப் படவில்லை எவ்வித பாதிப்பும் இல்லை என்றால்

இராசையா கிருஸ்ணபிள்ளை

இது கடலரசரின் கோயிலாகத்தானே இருக்க வேண்டும். குறைந்த அளவு மணலாவது வந்து சிவலிங்கங்களை மூடிக்கொள்ள வேண்டும் அல்லவா அதுகூட நடக்கவில்லை. தினமும் சிவலிங்கம் தெளிவாக வெளிப்படுகிறது. மக்கள் பூஜிக்றார்கள். இந்த ஐந்து லிங்கங்களையும் பாண்டவர்கள் ஐவரும் வழிபட்ட தாகவரலாறு சொல்கிறது. பாண்டவர்கள் ஐவரும் தேவதைகளின் புதல்வர்களாவார்கள். தர்மதேவன் அருளால் தருமனும் வாயுதேவன் அருளால் பீமனும் தேவேந்திரன் அருளால் அர்ஜீனனும் அஸ்வினி குமாரர்களின் அருளால் நகுலனும் சகாதேவனும் குந்தியிடமும் மாதுரியிடமும் தவழ்ந்தார்கள் அந்த ஐந்து பாண்டவர்களும் இந்த ஆலயத்தில் வழிபட்டுசென்றனர் என்பது வரலாறு தினந் தோறும் பத்து மணிநேரம் வழிபாட்டுக்கு கடலரசனால் கோயில் திறந்து வைக்கப்பட்டு மீண்டும் நீரால் மூடப்படுகிறது. இது மிகப் பெரிய அதிசயமாகும். நித்தமும் நிகழ்ந்து கொண்டிருக்கும் அதிசயம். உலகில் வேறெங்கிலும் கடல் இப்படி உள்வாங்குவதில்லை.

■ ■ ■



நன்றி: இணையம் குமரி கிருஸ்ணன்


மட்டக்களப்பு அமைப்பின் பொறுப்பாளர்


கொரியா சென்ற மாணவன்

# தென்கொரியாவில் இலங்கைக்கு பெருமைசேர்த்தார் நாவற்குடா மாணவன்

## க. சங்கீர்த்தனன்

தற்போதைய காலகட்டத்தில் மாணவர்கள் மற்றும் இளவயதினர் மத்தியில் தங்களுக்கே உரித்தான தனித்துவமான திறமைகளை வளர்த்துக் கொள்வதில் வழிகாட்டுதல்கள் மற்றும் ஊக்கப்படுத்தல்கள் குறைவாகவே காணப்படுகின்றது எனக் கூறலாம். ஏனெனில் மாணவர்கள் வெறுமனே தங்கள் பாடசாலைக் கல்வியை மட்டும் கற்றுக் கொள்வதில் பெற்றோர் ஆர்வம் காட்டுவதனால் வெளிக்களச் செயற்பாட்டில் அவர்களை ஈடுபடுத்துவது குறைவாகவே கணப்படுகின்றது.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் ஒரு டாக்டராகவோ, பொறியியலாளராகவோ அல்லது கணக்காளராகவோ வரவேண்டும் என விரும்புகின்றனர். இதனால் அந்த மாணவர்களுக்கே உரித்தான அவர்களுக்கு விருப்பமான துறைகளில் அவர்களைச் செல்லவிடாது தாங்கள் விரும்பிய துறைகளில் மாணவர்களைக் கற்பிற்பதில் தூண்டுகின்றனர். இதனால் அந்த மாணவர்கள் தங்களுக்கே உரித்தான தனித்திறமைகளை வெளிக்காட்டுவதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்படுவதுடன் மழுங்கடிப்புச் செய்யப்படுகின்றது. இதன் விளைவாக மாணவர்கள் மத்தியில் மன அழுத்தம், போட்டிமனப்பான்மை, பொறாமை, மனக்கிலேசலம், தற்கொலைகள் என்பன அதிகரித்துக் காணப்படுகின்றன. இன்னொரு பகுதி மாணவர்கள் பெற்றோர்களின் வறுமை மற்றும் தவறான பழக்கவழக்கங்கள் காரணமாக கவனிப்புக்கள் எதுவுமின்றி தாங்கள் விரும்பிய விதங்களில் தவறான நபர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி மதுப்பழக்கம், புகைப்பிடித்தல் மற்றும் ஏனைய தவறான பழக்கங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதை எம்மால் காண முடிகின்றது.

இத்தகைய மாணவர்களை பொதுவாக இவர்களது பாடசாலை மற்றும் இவர்களது சுற்றுச் சூழலில் வசிப்பவர்கள் பெரிதாக கண்டு கொள்ளாமல் விடுவதுடன் இவர்களுக்கு தவறான ஒரு முத்திரையையும் இட்டு சமூகப் பொறுப்பற்றவர்கள், உதவாதவர்கள் போன்ற இன்னோரன்ன பெயர்களால் அழைக்கின்றனர். இதனால் இத்தகையோர் சமுதாயத்திற்கு பயனற்றவர்களாக தம்மைத் தாமே எண்ணிக் கொண்டு சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன் அந்தச் சமூகம் பின்தங்குவதற்கும் காரணமாகிவிடுகின்றது. உயர்ந்த மற்றும் நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கிடைக்கும் வசதிகள் மற்றும் கவனிப்புக்கள் இவர்களைச் சென்றடைவதில்லை.

நிறுவனங்கள் மற்றும் சமூக முன்னேற்ற இயக்கங்கள் போன்றவை ஓரளவு கல்வியில் ஆர்வம் காட்டும் முன்னேறியிருக்கும் மாணவர்களை இலக்கு வைத்தே தங்கள் திட்டங்களைத் தீட்டுவதால் இத்தகையோர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். இவர்கள் பாடசாலைகளில் இவர்கள் கடைசி மட்ட மாணவர்களாக இருப்பதால் இவர்கள் மீதான கவனம் பாடசாலை மட்டத்திலும் குறைகின்றது. எனவே ஆசிரியர்கள் இவர்களை பயனற்றவர்களாக மற்றவர்கள் மத்தியில் சித்தரிப்பதனால் பாடசாலையிலும் இவர்கள் தங்களுக்கான அங்கீகாரம் இன்றி தங்களை ஒருவிதமான தாழ்வுமனப்பான்மைக்கு உட்படுத்திக் கொண்டு தங்களுடைய இந்த இடைவெளியை ஈடுபடுத்துவதற்காக தங்களிலும் வயது கூடிய சமூகத்திற்கு பயனற்ற விதத்தில் நடந்து கொள்ளும் நபர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தங்களுக்கும் சமூகத்திற்கும் பயனற்ற நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றனர்.

இத்தகைய மாணவர்கள் தங்களுக்கேயுரித்தான தனித்துவமான சில திறமைகளைக் கொண்டுள்ளதை எமது நாவற்குடாவில் இயங்கி வரும் இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் அமைப்பானது உணர்ந்து கொண்டது. எனவே பாடசாலைக் கல்விகளில் நல்ல மதிப்பெண்களைப் பெறும் தனித்திறமை கொண்ட மாணவர்களையும் உள்ளடக்கிக் கொண்டு பாடசாலைக் கல்வியில் பின்தங்கியுள்ள தனித்திறமையுள்ள மாணவர்களையும் இனங்கண்டு அவர்களின் திறமைகளை சமூகத்திற்கும் உலகிற்கும் எடுத்துக் காட்டும் ஒரு செயற்பாட்டில் ஈடுபட்டு வெற்றியும் கண்டுள்ளது.

இவ்வாறு எம்மால் இனங்காணப்பட்ட இரண்டு மாணவர்கள் நாவற்குடாவில் இயங்கி வரும் எமது இலங்கைக் கண்டு பிடிப்பாளர்கள் அமைப்பினால் வழிகாட்டப்பட்டதுடன் அவர்கள் இலங்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 21 மிகச் சிறந்த மாணவர் கண்டுபிடிப்பாளர்களுள் ஒருவராக வருவதற்கும் வாய்பை ஏற்படுத்திக் கொடுத்தது. சமூகத்தால் சக நண்பர்களால், இவர்களால் ஒன்றும் செய்ய முடியாது என்ற கருத்துக்கள் ஊட்டப்பட்டு அங்கும் இங்கும் தமது காலத்தைக் கழித்துக் கொண்டிருந்த மாணவர்கள் தங்கள் அகத்தே இருக்கும் உட்புற ஆற்றல்களை வெளிக்கொணரும் களமாக நாவற்குடாவில் இயங்கி வரும் இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் அமைப்பானது செயற்பட்டு வருகின்றது. உடலில் உள்ள குறைபாடுகள் மனதில் ஏற்படா வண்ணம் அத்தகைய மாணவர்கள் எம்மால் உள்வாங்கப்பட்டு அவர்களுக்கான மனவலிமை அதிகரிப்பதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களது உள்முக ஆற்றல்களை வெளிக் கொணரும் நடவடிக்கையை நாவற்குடாவில் இயங்கி வரும் இலங்கை கண்டு பிடிப்பாளர்கள் அமைப்பு வெற்றி பெற்றுள்ளது.

அந்த வகையில் எம்மால் அண்மையில் பயிற்று விக்கப்பட்டு தேசிய ரீதியாக தெரிவு செய்யப்பட்ட இரு மாணவர்கள் பாடசாலை கல்வி நடவடிக்கைகளில் முன்னணியில் இருப்பவர்களல்லர். ஆனால் இவர்கள் இருவரும் எமது அமைப்பினால் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் பல இடங்களிலும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங் காண்பதற்காக எம்மால் அழைத்துச் செல்லப்பட்டனர். எனவே அவர்கள் தங்கள் வழமையான நடவடிக்கைகளை விடுத்து தமது சமூகம் எதிர் கொள்ளும் பிரச்சினைகளின்பால் தம்மை ஈடுபடுத்த ஊக்கப்படுத்தப்பட்டனர். பின்னர் அந்தப் பிரச்சினைகளை தீர்க்கும் முகமாக அவர்கள் தங்கள் சிந்தனைகளைச் செலுத்த வழிகாட்டப்பட்டனர். இதன்போது கமல நாதன் சங்கீர்த்தனன் எனும் மாணவன் கீரைகளை அரிவதில் மக்கள் மற்றும் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தீர்க்கும் முகமாக நாவற்குடாவில் இயங்கி வரும் இலங்கைக் கண்டு பிடிப்பாளர் அமைப்பின் நேரடி வழிகாட்டலின் கீழ் கீரை அரியும் இயந்திரத்தை உருவாக்கினார். இதேபோல் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவான விவசாயிகளால் பயிர்செய்யப்படும் கச்சான் பயிர்ச்செய்கையின் போது விவசாயிகளால் எதிர்கொள்ளப்படும் கச்சான் (நிலக்கடலை) செடியில் இருந்து கச்சான் பிரித்தெடுக்கும் இயந்திரத்தை இலங்கை கண்டு பிடிப்பாளர்கள் அமைப்பின் நேரடி வழிகாட்டலில் செபமாலை றொகான் அவர்கள் உருவாக்கினார். இவர்கள் இருவரது கண்டுபிடிப்பும் விஞ்ஞானம் தொழிநுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் இயங்கி வரும் இலங்கை புத்தாக்குனர்கள் ஆணைக்குழுவினால் தேசிய ரீதியாக தெரிவு செய்யப்பட்ட 21 கண்டு பிடிப்புக்களுள் தெரிவு செய்யப்பட்டு கௌரவப்படுத்தப்பட்டது.

இவர்கள் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் இலங்கை புத்தாக்குனர்கள் ஆணைக்குழுவினால் பல கட்டங்களான பயிற்சிகளுக்குள் உள்வாங்கப்பட்டு தங்கள் இயலளவை அதிகரிப்பதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன. இதன் மூலம் இவர்கள் ஒரு சிறிய வரையறைக்குள் தாங்கள் முன்னர் இருந்ததாகவும் தற்போது தான் இத்தகைய வாய்ப்புக்கள் கௌரவங்கள் மதிப்பளித்தல்கள் போன்றன தங்களுக்கு கிடைப்பதாகவும் தமது உணர்வுகளை பகிர்ந்து கொண்டனர் இவர்கள் தமது வாழ்நாளில் முதல்முறையாக குளிரூட்டப்பட்ட பேரூந்துகளில்



பயணம் செய்த அனுபவத்தையும் மகிழ்ச்சியான விடயமாக முன்வைத்தனர். தங்களை தமது சமூகம் தமது சுற்றம் தமது நண்பர்கள் போன்றோர் முன்னர் தங்களை நோக்கிய விதத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட விதத்தில் ஒரு கௌரவமான விதத்தில் நோக்குவதாகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். இவர்கள் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ச்சிக்காக அழைக்கப்பட்டு இவர்களது கண்டுபிடிப்புக்கள் மற்றும் இவர்களது பேட்டி என்பன ஒளிபரப்பாகியமை வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்வாக கூறினர். இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தினால் ஒளிபரப்பப்படும் "இனோவா மைன்ட்ஸ் 2017" நிகழ்ச்சியில் இவர்களது கண்டுபிடிப்புக்களை நீங்கள் காணலாம்.

இவர்கள் இருவரும் தமது கண்டுபிடிப்புக்களுக்காக தென்கொரியாவில் இடம்பெறும்

சர்வதேச புத்தாக்குனர்கள் கண்காட்சியில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பையும் பெற்றனர். இவர்களில் ஒருவர் தவிர்க்க முடியாத தனிப்பட்ட காரணத்தினால் தென்கொரியா செல்லவில்லை. மட்டக்களப்பு கருவேப்பங்கேணி விபுலானந்தா கல்லூரி மாணவன் கமலநாதன் சங்கீர்த்தனன் தென்கொரியா பயணமாகி அந்தப் போட்டியில் பங்கு பெறும் அரியவாய்ப்பைப் பெற்றார். அங்கு அவர் கொரிய மாணவர்களின் தொழிநுட்பம் மற்றும் அறிவியல் திறன்கள் வியக்கத்தக்க வகையில் அமைந்திருந்ததாக தமது கருத்தை வெளியிட்டார். அங்கு நவீன இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் போன்றவற்றை பார்ப்பதற்கான வாய்ப்பு தனக்குக் கிடைத்ததாகவம் கூறினார். அங்கு தற்பொழுது நவீன பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மெக்காடொனிக்ஸ் எனும் பாடப்பரப்பு அதிகளவில் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுவதாகவும் அந்தக் கல்விநெறியை தாம் தொடர விரும்புவதாகவும் கூறினார். இவர் கொரியாவில் இருந்து வரும்பொழுது நாவற்குடாவில் இயங்கி வரும் இலங்கை கண்டு பிடிப்பாளர்கள் அமைப்பின் மாணவ கண்டுபிடிப்பாளர் களுக்கு மெக்காடொனிக்ஸ் பாடப்பரப்பை இலகுவில் விளங்கப்படுத்தக்கூடிய கையடக்கத்தொலைபேசியின் புளூடுத் மூலம் இயக்கக்கூடிய சிறிய ரோபோட் இயந்திரங்களை அன்பளிப்பாக வழங்கியிருந்தார்.

இவர்களது கண்டுபிடிப்புக்களை பேட்டன்ட் (ஆக்கவுரிமைப்பத்திரம்) செய்வதற்கு தேவையான பண உதவியை திருமதி. கலா மகேந்திரராஜா மற்றும் திரு. நமசிவாயம் மோகனதாஸ் ஆகியோர் வழங்கியிருந்தனர். இவர்களது ஏனைய செலவுகளை இலங்கை கண்டுபிடிப்பாளர்களின் அமைப்பின் தலைவர் பொறுப்பேற்றார்.

நாவற்குடாவில் இயங்கிவரும் இலங்கைக் கண்டு பிடிப்பாளர்கள் அமைப்பின் தங்கவேல் சக்திகுமார் அவர்களின் மிக்ஷர் தயாரிக்கும் இயந்திரம், செங்கல் தயாரிக்கும் இயந்திரம் , பொலித்தீனில் பிரின்ட் செய்யும் இயந்திரம், சோடாமூடி பொருத்தும் இயந்திரம், மற்றும் திருமதி. சுதர்சினி சக்திகுமார் அவர்களின் பைட்ஸ் தயாரிக்கும் இயந்திரம், சக்திகுமார் போஜஸ்வினி அவர்களின் குறியிடும் அளவுநாடா, விவசாயிகளுக்கான பாதுகாப்புக் காலணி, சூழல்நேய மீன்வளர்ப்புப் பூச்சாடி, ஜெயகரன் சாருஜன் அவர்களின் மேசைவிளக்குடன் கூடிய கையடக்கத் தொலைபேசிச் சாஜர், செல்வேந்திரன் ஜெனிஸ் அவர்களின் வயர் வெட்டும் இயந்திரம், கமலநாதன் சங்கீர்த்தனனின் கீரை அரியும் இயந்திரம் என்பன செப்டெம்பர் மாதம் 27,28,29,30 ம் திகதிகளில் இலங்கை கண்காட்சி மற்றும் சம்மேளன மண்டபத்தில் நடைபெறும். தேசிய புத்தாக்குனர் கண்காட்சிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை மேலும் சிறப்பாகும்.

நாவற்குடாவில் இயங்கி வரும் இலங்கைக் கண்டுபிடிப்பாளர்கள் அமைப்பானது இன மத மொழிகளைக் கடந்து மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் மறைந்திருக்கும் ஆற்றல்களை சமூகத்திற்கும் நாட்டுக்கும் பயனுள்ள வகையில் மாற்றியமைக்கும் ஒரு உன்னத பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. இது எமது மாவட்டம், எமது மாகாணம், எமது நாடு போன்ற மட்டங்களில் நிலவிவரும் பிரச்சனைகளுக்கான சாத்தியமான கண்டுபிடிப்புகளுக்கூடாக தீர்வுகளை வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. இதன் தாரக மந்திரம் “புத்தாக்கத்தினூடு புதுயுகம் படைப்போம்” என்பதாகும். இவ்வமைப்பானது மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் போன்றவர்களது ஆக்கத்திறனை விருத்தி செய்யும் நோக்குடனும் புதிய கண்டுபிடிப்பாளர்களை உருவாக்கும் நோக்குடனும் கண்டுபிடிப்பாளர்களுக்கான விசேட பாடத்திட்டமொன்றை தயாரித்து வருகின்றது.

இந்த பாடநெறியில் இன மத மொழி வயது வேறுபாடின்றி யாரும் இணைந்து கொள்ளலாம். நாவற்குடாவில் இயங்கி வரும் இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் அமைப்பில் தம்மையும் இணைத்துக் கொண்டு எமது பிரதேசத்தை வளமுள்ளதாகவும் பொருளாதார எழுச்சியுடன் கூடிய ஒரு வள்முக சமுதாயத்தை உருவாக்குவதற்கு தம்மை இணைத்துக் கொள்ள விரும்புவோர் நாவற்குடாவில் இயங்கி வரும் இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் அமைப்பு, 414, புதிய கல்முனை வீதி, நாவற்குடா, மட்டக்களப்பு எனும் விலாசத்தில் அங்கத்துவப் படிவங்களை பெற்றுக் கொள்ளலாம். அல்லது 0777142353 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

■ ■ ■

# தமிழ் ஓசை நுண்ணறிவு வினாவிடைப் போட்டி



**போட்டி இல. : 01**

## வினாக்கள்

01) ஒரு ஒற்றை எண்ணையும் இன்னொரு இரட்டை எண்ணையும் கூட்டும்போது கிடைப்பது ஒற்றை எண்ணா இரட்டை எண்ணா?
02) ஒரு சதுரத்திற்கு எத்தனை சமச்சீர் அச்சுக்கள் உள்ளன?
03) ஒரு முழுப்போத்தலின் கொள்வனவு எத்தனை மில்லி லீற்றர்?
04) 5 மாடுகளுக்கும் 4 கோழிகளுக்கும் 3 கோழிக்குஞ்சுகளுக்கும் எத்தனை கால்கள்?
05) 3 நிமிடம் 20 செக்கனை செக்கனில் தருக?
06) தென்மேற்குத் திசைக்கு எதிர்த்திசை யாது?
07) 30 கிராம் நிறையுடைய 40 பக்கற்றுக்களின் நிறை யாது?
08) ஒரு மீற்றர் துணியிலிருந்து 35 சென்ரிமீற்றர் நீளமான துணியை வெட்டி எடுத்தால் மீதித்துணியின் அளவு யாது?
09) ஒரு முட்டையின் விலை ரூபாய் 14.00 முட்டையின் விலையை விட ரூபாய் 3.00 குறைவாக தோடம்பழம் ஒன்று விற்கப்பட்டது எனின் மூன்று தோடம்பழங்களின் விலையாது?
10) ஒரு பந்தின் விலையின் இருமடங்கு ஒரு பெரிய பலுனின் விலை ஒரு பலுன் ரூபாய் 25.00 எனின் இருபந்துகளின் விலை யாது?

**நிபந்தனைகள்.**

- தரம் – 03 04 05 வகுப்பு மாணவர்கள் மாத்திரம் பங்குபற்ற வேண்டும்.
- வினாக்களுக்குரிய சரியான விடையினை கீழ்குறித்த படிவத்தில் எழுதி விண்ணப்பத்தை பூர்த்தி செய்து வெட்டி தபாலில் அனுப்பிவைக்க வேண்டும் படிவத்தினை பிரதி செய்து அனுப்புவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- குறித்த பத்து வினாக்களுக்குரிய சரியான விடையினை எழுதியவர்கள் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படுவர் தெரிவுசெய்யப்படும் முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூபா 500, 300, 250 பணப்பரிசில்கள் வழங்கப்படும் வெற்றியீட்டிய மாணவர்களின் பெயர்கள் அடுத்து வரும் பத்திரிகையில் வெளியிடப்படுவதுடன் அதிஸ்டசாலிகளாக 5பேர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களது பெயர்கள் பிரசுரிக்கப்படும்.

**விடைகளை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி**
**20-10-2017**

**அனுப்ப வேண்டிய முகவரி**
**ஆசிரியர்**
**தமிழ் ஓசை**
**இல. 184, பஸார் வீதி, மட்டக்களப்பு**

**விடைகளை எழுதி அனுப்பவேண்டிய படிவம்**

01. ____________ 02. ____________
03. ____________ 04. ____________
05. ____________ 06. ____________
07. ____________ 08. ____________
09. ____________ 10. ____________

முழுப்பெயர் : ____________
முகவரி : ____________
தொலைபேசி இல. : ____________ தரம் : ____________
பாடசாலை : ____________

# மட்டக்களப்பு ஆரையம்பதி 'fh' இலக்கிய வட்டத்தில் ஜேர்மன் ஆவணக்காப்பாளர்

md;ud; N[hrg;

புலம் பெயர்ந்தாலும் எம் பொக்கிஷங்களை பாதுகாப்பதில் பின்னிற்கப்போவதில்லை என்ற திடமான மனதுடன் ஆவண சேகரிப்பில் திகழ்ந்து உலகளாவிய ரீதியில் பல்வேறு நாடுகளிலும் தனது ஆவணப்படுத்தல்களை காட்சிப்படுத்திய பெருமை கொண்டவர்.





தன்னால் சிறுவயதில் இருந்து சேகரிக்கப்பட்ட தபால் முத்திரைகள், நாணயத்தாள்கள், நாணயக்குற்றிகள், தபால் அட்டைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், பண்டைய காலத்து பாத்திரங்கள் போன்ற பல்வேறு விதமானவற்றை சேகரித்து அவற்றை பாதுகாத்து மக்களின் பார்வைக்கு காட்சி படுத்திவருகின்ற பெருமையினைப்பெற்றவர் அன்ரன் ஜோசப் அவர்கள்.

இவரின் இத்தகைய கண்காட்சி அண்மையில் மட்டக்களப்பில் "கா" இலக்கிய வட்டத்தின் அனுசரணையுடன் ஆரையம்பதியில் இடம்பெற்றது ஆவணப்படுத்தலா அது என்ன? எப்படி இருக்கும் என்று மனதிற்குள் எழுந்த கேள்விகளுக்கு விடை தேடிக்கொண்ட போதுதான் அந்த மனிதரின் அற்புதங்கள் தெரிந்தது அதனை பார்த்தவருக்கு புரியும் வலியும் வருடக்கணக்கில் அவர் பட்ட துன்பமும் பார்க்காதவர்களுக்கு பார்த்தவர்கள் எடுத்து கூறியும் புரியாத வையாகத்தான் தெரியும். ஆனாலும் திடீர் முடிவில் செயற்படுபவர்கள் என்றால் சொல்வார்கள் அவருக்கு வேலையில்லையாக்கும் என்று அவர்களுக்கு அதன் பெறுமதி சமூக சிந்தனை எதிர்கால சந்ததி என்கின்ற எண்ணம் இருக்காது. இன்றும் நான் சில விடயங்களை கற்க வேண்டும்.விடயங்களை தேட வேண்டும் என்ற கல்வி பசி கொண்டவன் குறுகிய வட்டத்திற்குள் இருந்து வெளியேறி ஓடத் தொடங்குவான். குறுகிய வட்டத்திற்குள் இருக்கும் எம்மில் சிலர் நையாண்டி கலந்த பாணியில் கதைப்பார்கள் இலக்கை நோக்கி ஓடுபவருக்கு ஒன்றும் புதிதல்ல. கோடான கோடி பணம் செலவழித்து விழா எடுத்தவர்களுக்கு எல்லாம் இது பெரிய அளவில் கண்ணுக்கு தென்பட்டிருக்காது. அவர்களுக்கு பணமும் ராஜமரியாதையும் கண்களு க்கு தெரியும் ஆனாலும் பணமில்லை.

தம் தமிழர் பண்பாட்டை தமிழர் பாரம்பரிய பொக்கிஷங்களைப் பேணிப்பாதுகாத்து வருகின்ற ஒருசிலர் கோடான கோடி பணம் செலவழித்து விழா எடுப்பவர்களின் கண்களுக்கு தென்படாத விடயம் தான் வேதனையானது. மெல்லப்பாயும் அருவி கல்லையும் உருவிப்பாயும் என்பார்கள். அந்த வகையில் ஆவணக்காப்பாளர் அன்ரன் ஜோசப் அவர்கள். தனது 40வது கண்காட்சியினை மட்டக்களப்பு ஆரையம்பதியில் நடாத்தியது அங்கு





கூடிய அத்தனை இலக்கியவாதிகள் எழுத்தாளர்கள், கலைஞர்கள், கல்வியலாளர்கள் அனைவரினதும் மனதை தொட்டுச்சென்றிருக்கும் என்பதில் ஐயமில்லை. இலங்கையில் இருந்து வெளியிடப்படுகின்ற பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் போன்றவற்றை ஆவணப்படுத்துவதற்குரிய வசதி வாய்ப்புகள் குறைவாக காணப்பட்டாலும் புலத்தில் அதற்கான ஆவணப் படுத்தல்கள் அதிதீவிரமாக இடம் பெறுவது வரவேற்கத்தக்க விடயம். யாழ்நூலகம் எரிப்புக்கு பின் இலங்கையில் நூல் ஆவணப்படுத்தல்கள் குறைவாக காணப்பட்டது. அத்தகைய ஆவணப்படுத்தலில் பல்கலைக்கழகங்கள் பெரும் துணை நிற்கவேண்டிய காலப்பகுதியில் அவை பல்வேறு அசாதாரண சூழலின் காரணமாக கைவிட்ட நிலையிலும் கூட சில பல்கலைக் கழகங்களில் ஆவணப்படுத்தலுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் வேகம் இன்னும் விரைவாக்கப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்டால் எதிர்கால மாணவர்களின் கற்றலுக்கு உந்துதலாக இருக்கும். இத்தகைய வழிமுறைகளை எதிர்காலத்தில் இத்தகைய ஆவணக் காப்பாளர்களினால் சமூக மட்டத்தில் கண்காட்சிகளையும், விழிப்புணர்வுகளையும் மேற்கொண்டால் இன்னும் சிறப்பாகும் அதற்கு நம்மவர்களும் கைகொடுத்தால் சாலப்பொருத்தமாக இருக்கும்.





அன்ரன் ஜேசப் அவர்களுக்கு மட்டுநகர் 'கா' இலக்கிய வட்டம் வழங்கிய கௌரவிப்பும் காட்சிப்படுத்தல்கள் சிலவற்றின் படங்களும்


HOTEL EAST LAGOON



Munai Lane, Uppodai Lake Road,
Sinna Uppodai, Batticaloa, 30000, Sri Lanka.

+94 65 2 229222

PRIDE OF BATTICALOA


இப் பத்திரிக்கையானது தமிழ் ஓசை நிறுவனத்தினரால் மட்டக்களப்பு வணசிங்கா அச்சகத்தில் செப்டெம்பர் மாதம் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.